(ஆ) சமுதாய நலத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் பணத்திலிருந்து ஏதாகிலும் பணம் தரப்படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) There are 13 Women's Welfare Branches in Stage I Blocks (which were previously National Extension Service Blocks) and the expenditure on them is met from the Women's Welfare Department at present.

(*b*) No, Sir.

SRI S. M. ANNAMALAI : போளூர் சமுதாய நலத் திட்டப் பகுதியில் சோஷல் எடுகேஷன் பண்டிலிருந்து சுமார் நாற்பதாயிரம் ரூபாய் எடுத்து மாதர்நல இலாகாவிற்குச் செலவிட்டிருக்கிறார்கள். அது சர்க்காருக்குத் தெரியுமா ? அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 'இல்லை' என்று சொல்கிறார். ஆனால், ப்ளாக் அட்வைஸரி கமிட்டிக் கூட்டத்தில் நாற்பதாயிரம் ரூபாய் சோஷல் எடுகேஷன் பண்டிலிருந்து எடுத்து இதற்காகச் செலவழிக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இது உண்மையா ? அது உண்மையா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எனக்குக் கிடைத்திருக்கும் தகவல்களிலிருந்து நான் பதில் சொல்கிறேன். வேறு விதமாக இருந்தால் கனம் அங்கத்தினர் அவர்கள் அதைத் தெரியப்படுத்தலாம்.

Apiculture

* 199 *Q*.—SRI S. M. ANNAMALAI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா —

வடாற்காடு மாவட்டம், போளூர் தாலுகா, பட்டரைக்காட்டில் நடக்கும் தேனீ வளர்ப்பு திட்டத்தை விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A proposal to start a Training Centre in Bee-keeping in the Bee Nursery at Pattaraikadu is under consideration. No further expansion is under immediate contemplation.

Removal of leaves from Reserve forests

* 200 *Q*.—SRI S. M. ANNAMALAI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தும்பை, எருக்கன் போன்ற செடிகளின் இலைகளை எவ்வித கட்டளையின்றி எடுத்துச் செல்லக் கோரி ச. மொ. அண்ணாமலை, எம். எல். ஏ. யிடமிருந்து கடிதம் வந்ததா ?

(ஆ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Member has been given a reply indicating the position. The two species are not common in the Reserved Forests. If at all found in any quantity, Erukkan is noticeable in areas exposed to soil erosion in the Reserved Forests and it is best not to disturb their growth.

SRI S. M. ANNAMALAI ; தும்பை, எருக்கன் தழைகள் குறிப்பாக விவசாயத்திற்கு அதிகமாகப் பயன்படுகின்றன. இவை காடுகளில் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆனால், காடுகளிலிருந்து இலவசமாக எடுத்துச்செல்ல வேண்டுமென்றால், அதற்குத் தடைகள் விதிக்கப்படுகின்றன. கீழேயிருக்கும் காடுகளில் உள்ள அந்தத் தழைகளை இலவசமாக எடுத்துச்செல்ல சர்க்கார் மறுபரிசீலனை செய்து இதை அனுமதிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM ; விஞ்ஞான வகையிலே பார்த்தால் இந்தத் தழைகளைவிட வேறு நல்ல பசுந்தாள் உரம் பயன் படுகிறது. அவைகளை உற்பத்தி செய்யலாம்; உபயோகப்படுத்தலாம். எருக்கன், தும்பை இவைகளை எடுப்பதால மண் அரிப்புக்கு ஏதுவாகிறது. ஆகையாலதான் அவற்றை எடுத்துச் செல்வது தடுக்கப்படுகிறது.

Legislative Committee for examination of Bills

* 201 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal before the Government to constitute a special committee consisting of Legislators to examine Bills before introduction?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI S. LAZAR : கொள்கை ரீதியாக இந்தச் சட்டசபை கண்காணித்து வந்தபோதிலும் சட்ட ரீதியாக ஒருசில தவறுகள் இந்த மசோதாக்களில், சட்டமானபிறகுகூட, நுழைகின்ற காரணத்தால், அவைகளைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, எல்லா மசோதாக்களும் தனிக் கமிட்டிக்கு விடப்படுவதில்லையென்ற காரணத்தால், இதுபோன்ற ஒருகுழுவை அமைக்க அரசாங்கம் முன்வருமா ? அது சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்ட குழுவாக இல்லை என்றாலும் சட்ட நிபுணர்களைக்கொண்ட குழுவையாவது அரசாங்கம் நியமிக்க முன்வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அம்மாதிரிச் சட்டசபைக் குழு அவசியம் இல்லை என்று சர்க்கார் கருதுகிறது. தனிப்பட்டவர்களைக் கொண்ட குழுவும் தேவை என்று சர்க்கார் நினைக்கவில்லை. ஆனால், இதைப் பரிசீலனை செய்வதற்காக சட்டக் கல்லூரியிலே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. சில முக்கியமான மசோதாக்கள் அந்தக் குழுவுக்கு அனுப்பப்பட்டு பரிசீலிக்கப்படுகின்றன.

SRI K. VINAYAKAM : Sir, apart from the financial Bills, what objection do the Government have to constitute a small committee of legislators coming from different political parties so that they may give their expert opinion before the introduction of Bills here? By this arrangement, later on we will not purchase trouble from them in the House.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, 'purchase-of-trouble' does not end with the scrutiny by a small commitee alone because other people think that they are greater experts and they want to find fault with the Bill that is brought forward. Therefore it is better that the whole Assembly considers it, and, if necessary, refers it to a Select Committee.

Drinking water-supply for Pudukkottai

* 202 *Q.*—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any scheme has been sanctioned to augment drinking water-supply to Pudukkottai Municipality in the Second Five-Year Plan; and

(*b*) if so, the present position?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) All items of the work under the water-supply improvements scheme except the installation of pumpsets, construction of quarters for Electrician and formation of an approach road have been completed.